Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 050 | வெள்ளிக்கிழமை | தை 2ஆம் நாள் 15 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## நேற்றும் 670 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜன.15

இலங்கையில் நேற்றும் 670 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்து 899 ஆக 15

## முல்லையில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜன.15

நிலத்தில் புதையுண்டிருந்த வெடிபொருள்கள் விமானப்படையினரால் முல்லைத்தீவு மாவட்டத்தின் இரு வேறு பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள் 15

## 32 மாதங்களில் ரஞ்சனுக்கு மீட்சி?

கொழும்பு, ஜன.15

நான்கு வருடங்கள் கடூழிய சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, சிறைச்சாலைக்குள் நன்னடத்தையுடன் செயற்பட்டால் 2 வருடங்கள் 15

## மன்னார் மருத்துவமனை விடுதி பூட்டு

மன்னார், ஜன.15

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் நோயாளர் விடுதி ஒன்று மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் முருங்கன் மருத்துவமனைக்கு மாற்றப்ப 15



படம்: ஐ. சிவசாந்தன்

## நல்லூர்க் கந்தனின் அலங்கார வளைவு


யாழ்ப்பாணம், ஜன.15

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கான நுழைவாயில்களில் ஒன்றாக அமைந்துள்ள செம்மணிப் பகுதியில், அலங்கார வளைவு நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலய தண்ணீர் பந்தல் சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் இந்த அலங்கார வளைவு அமைக்கப்பட்டது.

தைத்திருநாளான நேற்று, 15

# இனவெறி கொண்டோரால் நாட்டுக்கே சாபக்கேடு



## கடுமையாகச் சாடுகிறார் ரணில்

கொழும்பு, ஜன.15

போரில் இறந்தவர்களைத் தூபிகள் அமைத்து அல்லது நிகழ்வுகள் நடத்தி நினைவுகூர்வது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். அந்த உரிமைக்கு அனுமதி மறுப்பதற்கும் அதைத் தட்டிப் பறிப்பதற்கும் எவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. அடிப்படை உரிமையை மறுப்பது பெரும் மனித உரிமை மீறலாகும்.

இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 19

## இனப்படுகொலை ஆதாரங்களை அழிக்கின்றது இலங்கை அரசு!

### சர்வதேச மையம் ஐ.நாவுக்கு மனு

கொழும்பு, ஜன. 15

பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகளில் இலங்கை அரசு தலையிடுவதனைத் தவிர்க்க வேண்டும் என்பதை அரசுக்கு வலியுறுத்த வேண்டும் 15

## கிளி. பல்கலை வளாகத்தில் புத்தரின் மீது தாக்குதலாம்!

கிளிநொச்சி, ஜன.15

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் விகாரையிலுள்ள புத்தர் சிலை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

புத்தர் சிலையின் ஒரு காதுப் பகுதியில் மிகச் சிறியளவிலான சேதம் ஏற்பட்டுள்ளது என்றும், மூக்குப் பகுதியில் லேசான உரசல் அடையாளம் காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் 15

## கொவிட் விடயத்தில் வடக்கில் பாகுபாடு!

### சுகாதாரத்துறையினர் மீது மக்கள் அதிருப்தி

வவுனியா, ஜன.15

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட மருத்துவர், சிகிச்சை நிலையத்துக்குச் செல்லாது வீட்டில் தங்கியிருந்துள்ளார். இது தொடர்பான தகவல்கள் வெளிவந்த நிலையில் நேற்று அவர் சிகிச்சை நிலையத்துக்கு அம்புலன்ஸ் ஊடாக ஏற்றி அனுப்பப்பட்டுள்ளார். வவுனியாவில் தனியார் மருந்தகம் நடத்தி வருகின்ற 15



## கொரோனாவை மதிக்காத இரணைமடு ரசிகர்கள்!

கிளிநொச்சி, ஜன.15

இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், அதைப் பார்த்து ரசிப்பதற்காகப் பெருமளவிலான மக்கள் அங்கு தினமும் சுற்றுலா செல்கின்றனர். 15

## வடக்கில் 9 பேருக்கு நேற்றுத் தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது 19

## நிவாரணத்தில் மோசடி; விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.15

கொரோனா முதலாவது அலையின்போது யாழ்ப்பாணம் மாவட்டம் முடக்கப்பட்டிருந்தபோது தன்னார்வக் கொடையாளிகளால் யாழ்ப்பாண மாவட்டச் 15

# அக்கராயனில் வெள்ளம் மக்கள் பெரும் அவதி!

**கிளிநொச்சி, ஜன.15**
**கிளிநொச்சி மாவட்டத்தின் 2ஆவது பெரிய குளமாகிய அக்கராயன்குளம் வான் பாய்வதால், அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் அம்புலன்ஸ் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு மாற்று வழியைப் பயன்படுத்த வேண்டி உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

அக்கராயன் தாம் பாலத்தை மூடி வெள்ளம் பாய்வதன் காரணமாக பாதுகாப்புக் கருதி பாலத்தினூடான குறித்த வீதி இராணுவத்தால் மூடப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளாக அக்கராயன் தாழ்பாலப் பகுதியை மேம்பாலமாக மாற்றுங்கள் என, பொது அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றபோதும், இன்னமும் அந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படாததாலேயே இவ்வாறு சிரமம் ஏற்பட்டுள்ளது. அவசர தேவைகருதி அந்த வீதியூடாக அம்புலன்ஸ் வாகனங்கள் கூட பயணிக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. எனவே உரியவர்கள் இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ப-ரி2)



## இடம்மாறியது நூலக நிறுவனம்

யாழ்ப்பாணம், ஜன.15
இதுவரை காலமும் கொக்குவில், ஆடியபாதம் வீதியில் இயங்கி வந்த, நூலக நிறுவனம் நேற்று முதல், இல;55, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. அழிந்து போகும் நிலையிலுள்ள ஆவணங்களைப் பாதுகாத்து பேணுதல் என்ற அடிப்படையில் 2005 முதல் அவற்றை தேடிச் சேகரித்து எண்ணிம ஆவணகமாக நூலக நிறுவனம் ஆவணப்படுத்தி வருகின்றது. இந் நிறுவனமானது தனது 16 ஆவது ஆண்டு நிறைவில் 97 ஆயிரம் ஆவணங்களுடன் 17 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## வயோதிபப் பெண்ணுக்கு இராணுவத்தினரால் வீடு

முல்லைத்தீவு.ஜன.15
தனிமையில் வாழ்ந்துவந்த வயோதிபப் பெண்ணொருவருக்கு இராணுவத்தினரால் வீடொன்று நிர்மானிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நேற்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மல்லிகைத்தீவு கிராமத்தில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர், மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ரட்நாயக்க உள்ளிட்ட படை அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ-19)

## வாழ்வக நிறுவனத்தின் பரிசுத் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.15
வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் எண்பத்து நான்காவது பிறந்த நாள் நிகழ்வும் பரிசுத் தினமும் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 'ஏ' சித்தி பெற்ற துரைராசா அருண்குமார் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் உரையாற்றிய வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன், எமது மாணவர்கள் கல்வியில் தாம் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை மிகவும் சிறப்பாக நிரூபித்து வருகின்றனர். இதை மேலும் ஊக்குவிக்கும் வகையிலேயே இந்தத் தங்கப் பதக்கம் வழங்கும் மரபு வாழ்வகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. கோட்டா முறையில் அல்லாது சாதாரண வெட்டுப் புள்ளிகளைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கே இந்தத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார். கொரோனாப் பரவல் காரணமாக உள்ளக மாணவர்கள் மட்டத்தில் மிகவும் எளிமையாக நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## புதிய உறுப்பினர் பதவியேற்பு

சாவகச்சேரி, ஜன. 15
சாவகச்சேரி நகரசபைக்கு நியமிக்கப்பட்ட புதிய உறுப்பினர் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் கலந்துகொண்டு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.
சபைக்கு தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியிலிருந்து உறுப்பினராக நியமிக்கப்பட்ட க.சிவராசா பதவியிலிருந்து விலகியதையடுத்து புதிய உறுப்பினராக சாவகச்சேரி நகரசபையின் கல்வயல் வட்டாரத்தில் போட்டியிட்ட இராஜா இராஜகுமார் அந்தக் கட்சியால் நியமிக்கப்பட்டுள்ளார். (ப-9)



## ரெலோவின் பொங்கல் விழா

உழவர் திருநாளை முன்னிட்டு ரெலோ அரசியல் கட்சியின் மன்னார் அலுவலகத்தில் பொங்கல் விழா நேற்று நடைபெற்றது. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் உறுப்பினர்கள் எனப்பலர் இதில் கலந்துகொண்டிருந்தனர். (வ-213)



## வெள்ளத்தில் மூழ்கியது பளை மத்திய கல்லூரி

கிளிநொச்சி.ஜன. 15
பெய்துவரும் தொடர் மழை காரணமாக கிளிநொச்சி பளை மத்திய கல்லூரி வளாகம் முழுவதும் வெள்ளத்தால் நிறைந்துள்ளது.
இப் பாடசாலையில் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில், கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
பாடசாலை வளாகம் மற்றும் பாடசாலை வீதி என்பனவற்றில் வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது. இதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்குள் பிரவேசிப்பதற்கும், அங்கிருந்து வெளிச்செல்வதற்கும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-6)

# இன்னும் இலங்கையில் சமூகப் பரவல் இல்லை



## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.15**

**கொரோனாத் தொற்றுநோய் சமூகத்தில் பரவியுள்ளது என்று இன்னும் அறிவிக்க முடியவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேலா குணவர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; இலங்கையில் காணப்படும் கொவிட் 19 நோயாளிகளின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து தொற்று சமூகமயமாக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரமுடியாது. தொற்றுநோயியல் பரிசோதனைகளுக்கான கண்டுபிடிப்புகளுக்குத் தேவையான சதவீதத்தை இன்னும் எட்டவில்லை. மூன்றாம் அலை யின் போது அரசின் கொள்கை நாட்டை திறந்த நிலையில் வைத்திருப்பது மற்றும் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதாகும் -என்றார். (ப)



# கொழும்பு கிழக்கு முனையம் அரசின் உறுதிமொழி பொய்!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு விற்பனை செய்யப்படாது என்று அரசு கூறுவது பொய்யாகும். அரைப் பகுதியை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் குத்தகைக்கு வழங்கப்படாது எனவும், விற்பனை செய்யப்படாது எனவும் அரசு கூறுகின்றது. இது சூழ்ச்சிகரமான அறிவிப்பாகும். ஏனெனில் குத்தகைக்கு வழங்கினால்கூட குறிப்பிட்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் அந்த வளம் மீண்டும் நாட்டுக்கு கிடைத்துவிடும். ஆனால் அரைப் பகுதியை விற்பனை செய்வதென்பது அது மீள கிடைக்காது. இந்தியாவுக்கே உரித்தானமாக இருக்கும். கிழக்கு முனையம் முழுமையாக விற்பனை செய்யப்படாவிட்டாலும் அரைபகுதி விற்பனை செய்யப்படவுள்ளது.

நாட்டு வளங்கள் விற்பனை செய்யப்படாது, கடந்த அரசு மேற்கொண்ட திட்டங்கள்கூட மீளப்பெறப்படும் எனக்கூறியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்று என்ன நடக்கின்றது? சங்கிரில்லாவில் ஒரு பகுதியை விற்றது போல கிழக்கு முனையமும் விற்பனை செய்யப்படவுள்ளது. கடந்த அரசு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதால்தான் இப்படி நடக்கிறது என எம்மீது பழிசுமத்த முடியாது. ஏனெனில் உடன்படிக்கைகள் கிழித்தெறியப்படும் என்றல்லவா இந்த அரசு கூறியது, என்றார். (ஒ.44)

# நினைவுத் தூபி இடித்தழிப்பு வலுவான பிரேரணை வேண்டும்

## பிரிட்டன் தொழிற்கட்சி வலியுறுத்து

லண்டன், ஜன. 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமை, இலங்கைக்கு எதிராக வலுவான தீர்மானத்தின் அவசியத்தை எடுத்தியம்புகிறது என பிரிட்டன் தொழிற் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டோனாக் வலியுறுத்தியுள்ளார். அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் இறுதிக்கட்டப் போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள் உட்பட மனித உரிமைகளுக்கு எதிரான பல்வேறு குற்றங்கள் தொடர்பில் ராஜபக்ச சகோதரர்கள் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் இலங்கையின் மனித உரிமைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலைப் பாதுகாக்கும் வகையில் பிரிட்டன் அரசு ஜெனிவாவில் செயற்பட வேண்டும். இலங்கை விடயத்தில் புதிய தீர்மானமொன்றுக்கான உறுதிப்பாட்டை பிரிட்டன் அரசு உறுதிசெய்ய வேண்டும்.

அந்த தீர்மானத்தில் இலங்கையை கண்காணிக்கும் அலுவலகத்தை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தில் நிறுவுதல் என்ற விடயம் அமையப்பெற்று சிறப்பு பொறிமுறை கொண்டுவரப்பட வேண்டும், என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.இ)



# பேருந்து தீக்கிரை

முல்லைத்தீவு, ஜன. 15

துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்து நேற்று முன்தினமிரவு விசமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. பேருந்து உரிமையாளர் தன்னுடைய வீதியில் மழை நீர் தேங்கியமை காரணமாக வேறு ஒருவரின் வளவினுள் பேருந்தை நிறுத்தி வைத்திருந்த வேளை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. கிளிநொச்சியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் இந்தப் பேருந்து ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.222)

# மருத்துவ உபகரணங்கள் கூ.சங்கத்தால் கையளிப்பு

சாவகச்சேரி, ஜன.15

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் கொவிட்19 நடவடிக்கையில் ஈடுபடும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு ஒரு தொகுதி சுகாதார பாதுகாப்பு பொருள்களை நேற்று முன்தினம் வழங்கியுள்ளனர். சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைய, கை கழுவும் திரவங்கள், முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் ஆகியவை உள்ளடங்கிய பொதிகள் கையளிக்கப்பட்டன. (ந-9)

# மீண்டெழுமாம் ஐ.தே.க.

## புதிய பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி பலமாக இருந்தது. வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து தொகுதிகளிலும் அமைப்பாளர்கள் இருந்தனர். அதே போன்றதொரு நிலைக்கு கட்சி மீண்டும் கட்டியெழுப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச்செயலர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் 'உதயனுக்கு' வழங்கிய குறுகிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'கட்சியைப் பலப்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டு, அதன் பிரகாரம் நாடு முழுவதும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். குறிப்பாக தற்போதைய அரசு ஜனநாயக விரோத வழியில் பயணிக்கின்றது. அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் பல பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது அரசியல் பயணம் தொடரும்.

ஐக்கிய தேசியக்கட்சி என்பது இன, மத, மொழி, குல பேதங்களுக்கு அப்பால் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு முன்நோக்கி பயணிக்கக்கூடிய கட்சியாகும். 1977ஆம் ஆண்டில் நாட்டில் அனைத்து தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கென தொகுதி அமைப்பாளர்கள் இருந்தனர். அதேபோன்றதொரு நிலைமையை உருவாக்குவோம்.

அத்துடன், கட்சியின் அடுத்தக்கட்ட வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக விசேட ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்பட்டு, அதன் ஊடாக அறிவிக்கப்படும், என்றார். (ஒ.44)

# மஹாபொல நிதியத்தில் ஊழல் மோசடி

கொழும்பு, ஜன.15

மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் இணையவழி லொத்தர் சீட்டிழுப்பை இடைத்தரகரால் விற்பனை செய்தமையால் மஹாபொல நம்பிக்கை நிதியத்துக்கு கிடைக்க வேண்டிய 678 மில்லியன் ரூபா பெற்றுக் கொள்ளப்படவில்லை என அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு மிகப் பெரிய ஊழல் மோசடி என்பதை கோப் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபருக்குத் தெரியப்படுத்தி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழு பணித்துள்ளது. (வ-இ)







# மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர் மழையால் பாதிப்பு!!

**வவுனியா, ஜன.15**

**வவுனியா மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.**

வவுனியா நகர்ப் பகுதிகளின் வீதிகள் எங்கும் வெள்ளநீர் தேங்கியுள்ளதுடன், பூந்தோட்டம், கள்ளிக்குளம் மற்றும் சிறிநகர், கருப்பணிச்சாங்குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் உட்புகுந்துள்ளது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, வயல் நிலங்களிலும் வெள்ளநீர் தேங்கியுள்ளமையால் நெற்பயிர்ச் செய்கையும் அழிவைச் சந்தித்துள்ளது.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக குளங்க ளின் நீர் மட்டம் உயர்ந்து சென்றுள்ள நிலையில், மேலதிக நீர் வெளியேறி வருகிறது. குறிப்பாக நொச்சிமோட்டை, மூன்றாம் மடு, பாவற்குளம் ஆகிய குளங்கள் வான்பாய்கின்றமையால் இந்தக் குளத்தின் அருகிலுள்ள கிராமங்களுக்கு செல்லும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன. இதனால் அந்த வீதிகளூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் மழைவீழ்ச்சி தொடரும் பட்சத்தில் தாழ் நிலப்பகுதிகளில் பாதிப்புகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. (ற-110)

## மின்சாரம் தாக்கி மாப்பிள்ளை சாவு

கொழும்பு.ஜன.15

திருமண பந்தத்தில் இணையவிருந்த இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றது. திருமண ஏற்பாடு செய்யப்பட்ட மண்டபத்தில், மின்குமிழ் பொருத்துவதற்காக குறித்த இளைஞர் சென்றுள்ளார். இந்நிலையில் மின்சாரத்தால் தாக்குண்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

## சமுத்திரவியல் பல்கலைக்கு மாணவர்கள் சேர்ப்பு

கொழும்பு, ஜன.14

இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் 2021 ஆம் ஆண்டின் முதலாம் கல்வியாண்டில் பின்வரும் தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடல் உணவு தொழில்நுட்ப பட்டப்படிப்பு, நீரில் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ பட்டப்படிப்பு, நீரில் வளர்ப்பு தொழில் நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திரப் பொறியியலாளர், கடலக மாலுமி, ஆழ்கடல் சுழியோடி, உயிர்பாதுகாப்பு, நீச்சல், கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

படகைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமி பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேற்படி பயிற்சி நெறிகளுக்கு க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவம் உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேலும் இக் கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்து அவர்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கப்படும். மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை எமது அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்று இலங்கை சமுத்திர பல்கலைக்கழக யாழ். பிராந்திய உதவிப் பணிப்பாளர் எஸ்.எஸ் கிருஷ்ண லிங்கம் தெரிவித்தார். (ற-ரி4)



## ‘வெள்ளப் பொங்கல்’

கிளிநொச்சி, ஜன.15

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்கள் கடந்த சில நாள்களாக பெய்த தொடர் மழை காரணமாக நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதனால் புலோப்பளை மேற்கு சிந்தாத்திரை பிரதேச இளைஞர்கள் வெள்ளநீரின் நடுவே கற்கள் அடுக்கி தகரங்களை வைத்து சூரியனுக்கு பொங்கி வழிபட்டனர். (ரி4 214)

## யாழ் . சேவை பஸ்ஸில் இருவருக்குத் தொற்று

கொழும்பு, ஜன.15

வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்து ஒன்றில் இருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பேருந்தின் சாரதிகள், நடத்துநர்கள், பயணிகள் என்போருக்கு கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு அன்ரிஜன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பஸ் நடத்துநருக்கும் பயணி ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

## விதிமுறைகளை மீறி வியாபாரம்

*புடவைக் கடைகளுக்கு சீல்*

மட்டக்களப்பு, ஜன.15

கொரோனாத் தடுப்பு விதிமுறைகளை மீறி வியாபாரம் மேற்கொண்ட காரணத்தால் ஏறாவூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட புடவைக்கடை சிலவற்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பு செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின்படி, பல சரக்குக் கடைகள், புத்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம், மருந்தகங்கள், சிகையலங்கார நிலையங்கள், அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் கடைகள் தவிர்ந்த ஏனைய கடைகள் அனைத்தும் கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வரை மூடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவித்தலை மீறி சில புடவைக் கடைகளுக்கு உள்ளே தைப்பொங்கல் உடுதுணிகள் வியாபாரம் இடம்பெற்றதாலேயே கடைகளுக்குச் சீல் வைக்கப்பட்டது என பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க இலட்சினையுடன் கடைகளில் ஒட்டப்பட்டுள்ள அந்த அறிவித்தலில், தனிமைப்படுத்தப்பட்ட வர்த்தக நிலையம் கண்காணிக்கப்படுகின்றது.

இங்கு வெளியாள்கள் எவரும் உட்செல்ல வேண்டாம். எதிர்வரும் 25.01.2021 வரையான காலப் பகுதியினுள் வழங்கப்பட்ட அறிவுரைகளை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவீர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏறாவூரில் 6 புடவைக் கடைகளுக்கும் ஒரு புத்தக நிலையத்துக்கும் தனிமைப்படுத்தல் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன என பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மண்ணின் மக்களிடம் ஒப்படையுங்கள்

இந்திய அரசின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கலாசார மண்டபத்தை அரசின் நேரடி ஆளுகைக்குக் கீழ் கொண்டுவருவதற்கான முயற்சிகளின் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நகர்வு கடந்த சில மாதங்களாகவே தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து காரசாரமான கருத்துப் பரிமாற்றங்களும் முரண்நிலை வாதங்களும் நிகழ்ந்து வருவது தெரிந்ததே.

இந்தக் கலாசார மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடந்தபோதே இதன் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும், இந்தியா – இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார பரிவர்த்தனைத் திட்டம் குறித்தும் பல தரப்பினராலும் பல்வேறு வகையிலான ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. இருந்த போதிலும் அதுதொடர்பாக தொலைநோக்குப் பார்வையுடனான எண்ணக்கருத்துக்களைக் கொண்ட அறிவுஜீவிகள் "இது யாழ்ப்பாணத்துக்கான கலாசார மண்டபமா? அல்லது இந்திய கலைகள் மற்றும் ஏனைய அபிலாஷைகளை முன்னெடுப்பதற்காக யாழில் அமைக்கப்படும் ஓர் மண்டபமா? அல்லது இந்திய அரசால் இலங்கை அரசுக்கு யாழில் அமைத்துக் கொடுக்கும் பலநோக்குத் திட்டத்துக்கான ஒரு நிலையமா?" என்றெல்லாம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

யாழ். நகரில் நிர்மாணிக்கப்படும் இந்தப் பெரிய மண்டபத்தின் பயன்பாடு யாரின் அபிலாஷைகளை நிறைவேற்றும் இலக்கைக் கொண்டுள்ளது என்பதற்கான விடையை இன்னமும் தெளிவுபடுத்தவோ உறுதிப்படுத்தவோ முடியவில்லை. இந்த நிலையில் கலாசார மண்டப நிர்மாணப் பணிகள் முழுமை அடைந்துவரும் நிலையில் அரசுத் தரப்பு அதனை நிர்வகிக்கும் பொறுப்பை தம்வசம் எடுத்துக்கொள்ளும் முனைப்புடன் சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

'இலங்கை இந்திய மக்களுக்கு இடையே, குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு இடையேயான கலாசாரப் பரிவர்த்தனை ஊடாக இரு நாடுகளுக்கு இடையே ஒரு பண்பாடு மற்றும் பாரம்பரிய ரீதியிலான நல்லுறவைப் பேணுதவதற்கான அடிப்படையிலேயே இந்தக் கலாசார மண்டபத்தை இந்தியா யாழ்ப்பாணத்தில் அமைக்க முன்வந்துள்ளது" என்றே இந்த மண்டபம் அமைப்புத் தொடர்பில் இந்தியத்தரப்புக் கூறியிருந்தது. அது உண்மையானதெனில் இதனை நிர்வகிக்கும் பொறுப்பை யாழ்ப்பாண மாநகர சபையிடம் யாழ்ப்பாண மக்களிடம் கௌரவமாகக் கையளிப்பதே உகந்த விடயமாகும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று தடங்களூடான கலாசார உறவானது தென்னிந்தியாவையும் ஈழத் தமிழ் மக்களையுமே ஆதாரத்தளமாகக் கொண்டது. இரு தரப்பினருக்கும் இடையேயான கலாசாரப் பரிவர்த்தனையென்பது பெருமளவுக்கு தற்போது வரை ஒரு வழிப் பாதையாகவே இருந்தது; இருக்கின்றது. எனினும் எதிர்காலத்தில் அது பரஸ்பர பரிமாற்ற ரீதியிலான இருவழிப் பாதையாக மாற்றம் காணவேண்டிய ஒரு காலத்தேவையை வரலாற்றின் நகர்வுகள் உணர்த்தி வருகின்றன.

அரசியலுக்கு அப்பால் கலை, கலாசார, பண்பாட்டு ரீதியானதும் ஆன்மிகத்துடன் கூடியதுமான இறுக்கமான உறவுகள் பலப்பட வேண்டும். இதற்கென கலை, கலாசார பரிவர்த்தனைக்கான ஒரு மையம் அவசியம் என்பதால் இந்த மண்டபம் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்படவுள்ளது என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டதோ, அந்த நோக்கத்தைச் செயற்படுத்தக்கூடியவர்களிடமே அதை ஒப்படைக்க வேண்டும்.

இந்த மண்டபத்தை மத்திய அரசின் ஆளுகைக்குள் ஒப்படைக்குமாறு அரச தரப்பு விடுத்திருந்த கோரிக்கையை முதல்வர் மணிவண்ணன் நிராகரித்தமை சரியானதே. வெறுமனே நிர்வாகத்திறனைக் காரணம்காட்டி அரசு விடுக்கும் கோரிக்கை யாழ். மாநகர சபையை மட்டுமல்ல யாழ்ப்பாண மக்களையே நிர்வாகத்திறன் அற்றவர்கள் என்று சுட்டுவதாக அமைந்துவிடும்.

யாழ்ப்பாண கலாசார மையம் என்று அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இதனை இந்தியா நிர்மாணித்திருக்குமாயின், மண்டபத்தை யாழ். மாநகர சபையிடம் ஒப்படைத்து அதனை அந்த மண்ணின் மக்களே நிர்வகிக்க ஒப்படைக்க வேண்டும். அதுவே நியாயமானதுமாகும்.

### இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - நாமல் அமரசிங்க

# தனிமைப்படுத்தப்படுவோரிடம் பணம் அறவிட அனுமதிக்காதீர்!

## இராணுவத்தளபதி வேண்டுகோள்

**கொழும்பு, ஜன.15**

**வெளிநாடுகளில் இருந்து இந்த நாட்டுக்கு வரும் நபர்களை தனிமைப்படுத்துவதற்காக ஹொட்டல்களுக்கு அனுப்பும்போது சட்ட விரோதமாக பணம் பெறும் மூன்றாம் தரப்பினருக்கு அதற்காக எவ்வித சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது என இராணுவத்தளபதி ஜெனரால் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.**



கொவிட் - 19 வைரஸின் மூன்றாம் அலை பரவலின் பின்னர் இவ்வாறான மோசடியான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்யும் நடவடிக்கையொன்று செயற்படுத்தப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை மிகவும் உயர் தரத்தில் மற்றும் நம்பகத்தன்மையுடனும் பராமரித்துச் செல்ல இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளதால் அது தொடர்பில் இராணுவத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ள விம்பத்துக்கு சேதம் விளைவிக்க எவருக்கும் வாய்ப்பளிக்கப்படமாட்டாது என்றார். (ப)

## விவசாயம், மீன்பிடித்துறைகளில் வியட்நாம் அரசு அதி கவனம்

கொழும்பு, ஜன.15

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்த வியட்நாம் தூதுவர் பாம் திபிச் நொக் விவசாயம் மற்றும் மீன் வளத் துறைகளிலான ஒத்துழைப்புக்கு இலங்கை மற்றும் வியட்நாம் மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது வியட்நாம் தனது சிறந்த நடைமுறைகள், அறிவு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும் எனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

வியட்நாம் இலங்கைக்கு உதவி வழங்கக்கூடிய பிரிவுகளான பதப்படுத்தல் தொழில், குறிப்பாக மீன் பதப்படுத்தல், மீன் தீவன உற்பத்தி போன்ற பகுதிகளை அமைச்சர் குணவர்த்தன வலியுறுத்தினார். மீன்வளத்துறையில் இத்தகைய ஒத்துழைப்பு கிராமப்புற மீன்பிடித்தலை மேம்படுத்துவதற்கும், மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவில் மீன் வளர்ப்புக்கும் பங்களிக்கும் என்பதில் சந்தேகமில்லை என தூதுவர் பாம் திபிச் நொக் மேலும் தெரிவித்தார்.

விவசாயத் துறை ஒத்துழைப்பு குறித்து மேலும் கலந்துரையாடிய தூதுவர், வியட்நாம் விவசாயத்துக்கு எவ்வாறு உதவுகின்றது என்பதை அறியக் கூடிய கோப்பி, மிளகு மற்றும் இறப்பர் ஆகியவற்றில் அதிக சாத்தியக்கூறுகள் இருப்பதை அடிக்கோடிட்டுக் காட்டினார். இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை முன்னேற்றுவதற்காக முன்னுரிமை ரீதியான வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர வேண்டியது அவசியம் என இருவரும் ஒப்புக்கொண்டனர். (ப)

## இலங்கையர் நுழைய தடைவிதித்தது ஜப்பான்

டோக்கியோ, ஜன.15

கொரோனாப் பரவல் அதிகரிப்பையடுத்து ஜப்பானிய அரசாங்கம் நேற்றுத் தொடக்கம் அதன் எல்லைக் கட்டுப்பாடுகளை கடுமையாக்கியுள்ளது. இதற்கமைய இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளிலிருந்தும் பயணிகள் நுழைவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது என ஜப்பானிய பிரதமர் யோஷிஹைட் சுகா அறிவித்துள்ளார். இதன்படி, பெப்ரவரி 7 ஆம் திகதி வரை ஜப்பான் எல்லைகள் மூடப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# கிளிநொச்சியில் கடும் வெள்ளம்; பாதிக்கப்பட்டோருக்கு உலருணவு

**கிளிநொச்சி, ஜன. 15**



**கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நண்பர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு உலருணவு வழங்குவதற்காக 4 இலட்சத்து 38 ஆயிரத்து 700 ரூபாவுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற மழை காரணமாக அனைத்துக் குளங்களும் நிறைந்து நீர் வெளியேறுவதால் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இரணைமடுக் குளம் மற்றும் ஏனைய குளங்களிலிருந்து நீர் வெளியேறுகின்றது. அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 635 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் 442 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 442 பேர், நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதே வேளை 15 வீடு கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அறிக்கையிடப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நண்பர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு உலருணவு வழங்குவதற்காக 4 இலட்சத்து 38 ஆயிரத்து 700 ரூபாவுக்கான ஒதுக்கீட்டுக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

## முல்லையில் தொடரும் மழை

### வான்பாயும் குளங்கள்

முல்லைத்தீவு.ஜன.15

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக குளங்களின் நீர் மட்டங்கள் அதிகரித்து , அவை வான்பாயத் தொடங்கியுள்ளன.

முல்லைத்தீவு கமநலசேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள சகல சிறு குளங்களும், பெருநீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள முத்தையன்கட்டு குளத்தினை தவிர்ந்த 18 குளங்களும் வான் பாய்கின்றன.

தொடரும் மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரிக்கும் அதேவேளை வான் பாயும் தாழ்நிலப் பிரதேசங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. (ரி4-19)



## சிராட்டிகுளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடை

முல்லைத்தீவு.ஜன.15

பறங்கி ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் முல்லைத்தீவு சிராட்டிக்குளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பல குளங்கள் வான்பாய்ந்து கொண்டிருப்பதால் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மாந்தை கிழக்கின் சிராட்டிக்குளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது

கடந்த நான்கு நாள்களாக இந்த கிராமத்துக்கான வீதிப் போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் இதனூடான போக்குவரத்தை மேற்கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஜ-9)

### கிளிநொச்சியில்

## வெள்ளத்தால் பல ஏக்கர் நெல் வயல்கள் அழிவு

கிளிநொச்சி,ஜன.15

கிளிநொச்சி மாவட்டத்தில் கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் பல ஏக்கர் நெல் வயல்கள் நீரிழ் மூழ்கி அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.



கிளிநொச்சி மாவட்டத்தில் 2020 கால போகம் சுமார் 70 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் சுமார் 20 வீதமான வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்று கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அறுவடைக்கு தயாராக இருந்த பருவத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்த பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் எத்தனை ஏக்கர்களில் நெல் அழிவடைந்தது என்ற விபரம் வெள்ளம் வடிந்தோடிய பின்னரே மதிப்பீடு செய்யமுடியும் எனவும் கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

முரசுமோட்டை, பெரியகுளம், புதுமுறிப்பு,உருத்திரபுரம்,கண்டாவளை, உள்ளிட்ட பல பிரதேசங்களில் இவ்வாறு வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது "வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களை அதிகாரிகள் சென்று பார்வையிட்ட பின்னர் வழக்கம் போல காப்புறுதிச் சபையினால் அவர்களின் நடைமுறைகளுக்கு அமைவாக இழப்பீடுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறும் - என்றார். (ஜ-214)

## அங்குரார்ப்பண நிகழ்வு

சுதுமலை, ஜன. 15

"சலன்ச் மேக்கேர்ஸ்" என்ற புதிய விளையாட்டுக் கழகம் மற்றும் சமூக சேவை அமைப்பு ஆகியனவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சுதுமலை, கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் கு.மதுசூதன் மற்றும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் பே.சுபாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. (ஜ)

## மஹர சிறைச்சாலை கலவரம்; 120 கைதிகளுக்கு எதிராக வழக்கு!

### 6 கோடி ரூபாவுக்கும் மேல் சொத்திழப்பு

கொழும்பு.ஜன.15

மஹர சிறைச்சாலை மோதலின்போது சொத்துகளுக்கு சேதம் விளைவித்து வன்முறையில் ஈடுபட்ட 120 கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 116 கைதிகளுக்கும், சிறைத் தண்டனை அனுபவிக்கும் 4 கைதிகளுக்கும் எதிராக வழக்கு தொடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலால் 6 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்துள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார். மஹர சிறைச்சாலை மோதல் சம்பவத்தில் 11 கைதிகள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-44)

## வவுனியாவில் கடும் மழை; போக்குவரத்து துண்டிப்பு!

வவுனியா, ஜன.15

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா சின்னத்தம்பனை கிராமத்திலிருந்து மடு தேவாலயத்துக்குச் செல்லும் முதன்மை வீதியின் பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் இவ்வீதியைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இரணை இலுப்பைக்குளம், செங்கல்படை, வேலங்குள்ம், மடுக்குளம், சின்னத்தம்பனை ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மடு பிரதேச செயலகத்துக்குச் செல்லப் பயன்படுத்தும் முதன்மை வீதியாகவும் இது காணப்படுகிறது.

தற்போது பாலம் சேதமடைந்துள்ளமையால் மன்னார் முதன்மை வீதிக்கு செல்வதற்கு 10 கிலோமீற்றர் தூரம் சுற்றி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே குறித்த பாலத்தை விரைவில் திருத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-110)

# மேய்ச்சல் தரவைகளை விரைந்து இனங்காண்க

## அக்கராயன் பிரதேச மக்கள் கோரிக்கை

**கிளிநொச்சி, ஜன.15**

**கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் மேய்ச்சல் தரவைகள் விரைவாக இனங்காணப்பட வேண்டும் என்று கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

பிரதேசத்தில் விவசாயிகளாக உள்ளவர்கள் கூடுதலாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரு ஆண்டுகளில் கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டங்களில் அக்கராயன் குளத்தின் கீழ் மேய்ச்சல் தரவைக்கான பகுதி. இனங்காணப்படவில்லை. ஒரு காலத்தில் மேய்ச்சல் தரவையாக இனங்காணப்பட்டு இருந்த பகுதி பின்னர் கெங்காதரன் குடியிருப்பாக மாறியது. அக்கராயன் ஆற்றுப் பகுதியில் நிலப்பரப்புகள் மேய்ச்சல் தரவையாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் கடந்த 10 ஆண்டுகளில் இப்பகுதிகள் முழுமையாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அக்கராயன் பிரதேசத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் தற்போது காணப்பட்ட போதிலும் மேய்ச்சல் தரவைக்கான இடங்கள் இல்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இரண்டாம் கட்டைப் பகுதியில் இருந்து ஆனைவிழுந்தான் வரை தற்காலிக மேய்ச்சல் தரவைகளாக அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் வீதியின் இரு புறத்திலும் குடியிருப்புகளும் பயிர்ச் செய்கை நிலங்களும் காணப்படுகின்றன. பாலங்குளத்தின் கீழ் 100 ஏக்கருக்கு மேல் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த முடியாதுள்ளது. இதனால் கால்நடைகள் உயிரிழக்கும் அவலமும் ஏற்பட்டுள்ளது. அக்கராயன் பிரதேச கால்நடைகளை காப்பாற்றுவதற்கு மேய்ச்சல் தரவைகள் இனங்காணப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (ப-ரி2)



# முல்லையில் வெள்ளம் பாதித்த இடங்களுக்கு ரவிகரன் விஜயம்

முல்லைத்தீவு, ஜன.15

தொடர் மழை காரணமாக வெள்ளப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் வடக்கு, கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளை வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். கொக்குத்தொடுவாய் வடக்குப் பகுதியில் ஏழுவீடுகளைச் சுற்றி வெள்ள நீர் அதிகளவில் தேங்கிக் காணப்படுகிறது. தாழ்நிலப் பகுதிகளிலுள்ள இன்னும் பல வீடுகளும் சிறிய அளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அதே வேளை மழைக் காலங்களில், கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறான பாதிப்புக்களை அப் பகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். நிவாரணங்கள் வழங்காவிட்டாலும், வெள்ள நீரை தமது குடியிருப்புப் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துத்தருமாறு மக்கள் ரவிகரனிடம் கோரிக்கையை முன்வைத்துள் ளனர். இதையடுத்து உரிய அதிகாரிகளுக்கு தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தி மக்கள் குடியிருப்புக்களில் தேங்கியுள்ள நீரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ-246)



# கிளிநொச்சியில் கிராமங்களுக்கு பழ மரக்கன்றுகள் விநியோகம்

கிளிநொச்சி, ஜன.15

கிளிநொச்சி மாவட்டத்தில் மனைப்பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான பழமரக்கன்றுகள் விநியோகத் திட்டம், கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிராமங்கள் தோறும், ஒவ்வொரு வீட்டினதும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி கோத்தாபய, பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆகியோரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் பூரண வெற்றியளிக்கவேண்டும் என்ற நோக்குடன், பயனாளிகளுக்கு உரிய வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. நேற்றுமுன்தினம் புதன்கிழமை, கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் சிவிக் சென்றர், வட்டக்கச்சி, மாயவனூர், திருவையாறு மேற்கு, கிருஷ்ணபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் மாசார், புலோப்பளை, அல்லிப்பளை, முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி, கச்சார்வெளி, முகாவில், தர்மக்கேணி, தம்பகாமம், முல்லையடி, கச்சாவெளி, அரசர்கேணி உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கும் பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ப-ரி2)

# பாடசாலையில் திருட்டு இருவர் கைது!!

வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சில பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள், குறித்த பாடசாலையின் கூரையை உடைத்து உள்ளே இறங்கி அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருள்களைத் திருடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரனீத் திசாநாயக்க தலைமையிலான குழுவினர் சந்தேகத்தின் பேரில் இருவரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஜ-110)



# இறுவட்டு வெளியீடு

கிளிநொச்சி, ஜன.15

"கிளிநொச்சி சந்தைக்குள்ள போறாடா" என்ற இறுவட்டு கிளிநொச்சியில் நேற்று வெளியிடப்பட்டது.

பிரசாத்தின் தாளலயா கலையகத்தின் வெளியீட்டில் வினோத்தின் வரிகளில் வெளிவந்த இறுவட்டை கலைஞர்கள் வெளியிட்டு வைக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சிவமோகன். கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-6)

# எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வோம்

## மயூரக்குருக்கள் கோரிக்கை

வவுனியா.ஜன.15

தற்போதைய அசாதாரணமான சூழ்நிலை அனைவரும் அறிந்ததே. எனவே ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளோம். மதகுருமார்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்று சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ. மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது வவுனியாவில் மிக வேகமாகப் பரவிவரும் கொரோனா காரணமாக ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே பாதுகாக்கின்ற கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். ஆலயச் சூழலில் பூசைகள் தவிர்க்கப்பட முடியாதவை. அவை இடையூறு இன்றி நடக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே ஆலயம் சார்ந்த பரிபாலகர்கள் ஆலய பூசைகள் சிறப்பாகத் தடையின்றி இடம்பெற வேண்டுமேயானால் ஆலயத்துக்கு வருகின்ற அடியவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. வருகின்ற யாரோ ஒருவர் மூலம் பூசை செய்கின்ற குருவுக்கு தொற்று ஏற்பட்டால் ஆலயத்தையே பூட்ட வேண்டிய நிலை வரும். எனவே தற்போதைய அபாயகரமான சூழலைக் கருத்திற்கொண்டு உடனடியாக அடியவர்கள் ஆலயத்துக்கு பிரவேசித்தலை தடுத்துக் கொள்ளுங்கள் - என்றார். (ப-110)

## பாம்பு தீண்டி பெண் மருத்துவமனையில்!

சாவகச்சேரி, ஜன.15

மிருசுவில் வடக்கில் பாம்பு தீண்டி 37 வயது குடும்பப் பெண் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று முன் தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தைப் பொங்கலுக்காக வீடு துப்புரவு செய்த வேளையில், அறையினுள் இருந்த பாம்பு தீண்டியதிலேயே இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ற-9)

## மோசடி வர்த்தகர்களை தேடி வேட்டை

கொழும்பு, ஜன.15

2020 ஆம் ஆண்டில் அநீதியான முறையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த வர்த்தகர்களை தேடி 15 ஆயிரத்து 923 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவற்றுள் 14 ஆயிரத்து 906 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 6 கோடி ரூபாவுக்கு அதிக பணம் நீதிமன்றால் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றிவளைப்புக்களில் அரிசி சம்பந்தமாக 3 ஆயிரத்து 880 சுற்றிவளைப்புக்களும், சீனி சம்பந்தமாக 651 சுற்றிவளைப்புக்களும் மற்றும் பருப்பு சம்பந்தமாக 471 சுற்றிவளைப்புக்களும் உள்ளடங்குகின்றன என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (வ-இ)

# தேசிய சொத்துக்களை எவருக்கும் விற்காதீர்

## ஜே.வி.பி கோரிக்கை

**கொழும்பு, ஜன.15**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்தியா மற்றும் சீனா என எந்த நாட்டுக்கும் தேசிய சொத்துக்களை வழங்காமல், எம்மை சுயாதீனமாகச் செற்பட விடுங்கள் என்று அந்த நாடுகளிடம் பகிரங்கமாகக் கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிழக்கு முனைய விவகாரத்தில் கோத்தாபய ராஜபக்சவுக்கு தொடர்பில்லை என்று கூறப்பட்டது. துறைமுக அமைச்சர் றோஹித அபேகுணவர்தனவே இவ்விவகாரத்தில் பிரதானமானவர் என்று கூறப்பட்டது.

ஆனால் தற்போதுள்ள அமைச்சரவையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நேரடியாகப் பேசுவதற்கு தைரியமுடையவர்கள் யாரும் இல்லை. குறைந்தபட்சம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு நேரம் கூட ஒதுக்கப்படுவதில்லை. அவ்வாறிருக்கையில் ஜனாதிபதியின் தலையீடு இன்றி இதனை முன்னெடுத்திருக்க முடியாது- என்றார். (ப)



எஸ்.எல்.சி.டி.எவ். நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான வியாபாரத் திட்டமிடலை மேற்கொள்வது தொடர்பான இரண்டு நாள்களைக் கொண்ட செயலமர்வு கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சியிலுள்ள பாசப்பறவைகள் இளைஞர் அமைப்பின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தச் செயலமர்வில் பல இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ற-21)

## தனிமையிலிருந்து தப்பிக்க ஒளிந்துகொண்ட அனுருத்த?

கொழும்பு, ஜன.15

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் அனுருத்த பாதெனிய தனிமைப்படுத்தலில் இருந்து தப்பிப்பதற்காக ஒளிந்துள்ளார் என சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. களனி - டிபிடிகொடவில் உள்ள அனுருத்தவின் வீட்டில் 8 ஆம் திகதி விருந்து ஒன்று இடம்பெற்றது. அதில் 20 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து அனுருத்தவுனக்கு தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. உத்தரவை வழங்க அனுருத்தவின் வீட்டுக்கு அதிகாரிகள் சென்றனர். எனினும் நுழைவாயில் திறக்கப்படவில்லை என்றும் வீட்டு விளக்குகள் அணைக்கப்பட்டுள்ளன எனவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)

# கிழக்கு முனையம் விற்பனைக்கு இல்லை

## அறிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.15



கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் விற்கவோ அல்லது குத்தகைக்கு விடப்படவோ மாட்டாது என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மை அல்லது சுதந்திரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் நாட்டில் எந்தவொரு முதலீட்டையும் அனுமதிக்க மாட்டேன். பிராந்திய புவிசார் அரசியல் காரணிகள், நாட்டின் இறையாண்மை, வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்ட அனைத்து காரணிகளையும் ஆய்வுசெய்த பின்னர் கிழக்கு முனைய [redacted]ார்ச்சி திட்டமிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (வ-இ)

விவசாயப் போதனாசிரியர் ஆட்சேர்ப்பு –

## திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி!

யாழ்ப்பாணம், ஜன.15

வடக்கு மாகாண விவசாய போதனாசிரியர் தரம் 3 பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே நாளை மறுதினத்துக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் இல 393\48 கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியுடனோ அல்லது 0212219939 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கபடுவார்கள் என்று மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் திருவாகரன் தெரிவித்துள்ளார். (ற-ரி4)



தொல்புரம் ஆதி முத்துமாரியம்மன் வீதி ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அண்மையில் சீரமைக்கப்பட்டது. வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ச. ஜெயந்தனின் தேர்தல் வாக்குறுதிக்கு அமைய இந்த வீதி சீரமைக்கப்பட்டுள்ளது. (ரி5)

## பாம்பு தீண்டி பெண் மருத்துவமனையில்!

சாவகச்சேரி, ஜன.15

மிருசுவில் வடக்கில் பாம்பு தீண்டி 37 வயது குடும்பப் பெண் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

தைப் பொங்கலுக்காக வீடு துப்புரவு செய்த வேளையில், அறையினுள் இருந்த பாம்பு தீண்டியதி லேயே இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ற-9)

## ஈரோஸ் சங்கர் ராஜியின் நினை[redacted]னம் அனுஷ்டிப்பு!

வவுனியா, [redacted].15

ஈரோஸ் [redacted]ப்பின் ஸ்தாபகத் தலைவர்களில் [redacted]ம், அபுஜிகாத் நூலின் ஆசிரிய[redacted], தளபதி சங்கர் ராஜியின் பதினாற[redacted]நினைவுதினம் முல்லைத் தீவில் நே[redacted]ன்தினம் மதியம் 12 மணியளவில் [redacted]ஷ்டிக்கப்பட்டது.

ஈரோஸ் [redacted]நாயக முற்போற்குக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உபதலைவர் ரஜிவ் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அவர்கள் தொடர்பான நினைவுரைகளும் இடம்பெற்றன. நிகழ்வின் இறுதியில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ற-110)

# பிரிட்டனுக்கு தமிழர்களின் பங்களிப்பு மிகப் பெரியது!

## பிரதமர் போரிஸ் ஜோன்சன் பொங்கல் வாழ்த்து

**லண்டன், ஜன. 15**
**பிரிட்டனுக்கு தமிழ்ச் சமூகம் வழங்கிய பங்களிப்பு மிகமிகப் பெரியது இவ்வாறு தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன்.**



தனது கீச்சகத்தில் காணொளி ஒன்றை பதி விட்டுள்ள அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:
நம்முடைய அருமையான பிரிட்டன் தமிழ் சமூகத்தினர், உலகம் முழுவதும் பரந்திருக்கும் தமிழ் சமூகத்தினர் அனைவருக்கும் தைப் பொங்கல் வாழ்த்துகள். உங்கள் நண்பர்கள், குடும்பத்தாருடன் சேர்ந்திருக்கும் நாளாக இது அமையட்டும். இன்னும் கொண்டாடவும், எதிர்நோக்கி இருக்கவும் நிறைய இருக்கின்றது.
தித்திப்பான பொங்கல் வைப்பதோடு இல்லாமல் அனைவரும் மகிழ்ச்சியாக இந்தநாளை கொண்டாடுவீர்கள். பாரம்பரியமாக தைத் திருநாள் அறுவடையை வரவேற்கும் நாளாக, கொண்டாடப்படுகிறது.
தமிழ் சமூகத்தினர் பிரிட்டனின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்பவர்களாக, பள்ளிகளில் ஆசியர்களாக, மருத்துவத்துறையில் முக்கியப் பொறுப்புகளிலும், நோயாளிகளை கனிவுடன் சிகிச்சையளிக்கும் பிரிவிலும் இருக்கிறாகள். தமிழர்களின் பங்களிப்பு அளப்பரியது, மிகப்பெரிய மாற்றத்தைச் செய்திருக்கிறது மிக வும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பூமியில் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், ஒரு குடும்பத்தை வளர்ப்பதற்கும் மிகப் பெரிய இடமாக இந்த தேசத்தை மாற்றுவதற்கான நம் திட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுப்போம்.
அருமையான தமிழ்சமூகத்துக்கு எனது பெரு நன்றிகளை தெரிவித்து, பொங்கல் பண்டிகையையும் அடுத்து வருகின்ற நாள்களையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வாழ்த்துகிறேன். பானையில் பொங்கும் இனிப்பான பொங்கலைப்போன்று மகிழ்ச்சியும், செழிப்பும் ஆண்டுமுழுவதும் இருக்கட்டும்' என்றுள்ளார். (ம)

# ட்ரம்பை பதவிநீக்க மறுத்தார் பென்ஸ்!!

வொஷிங்டன், ஜன. 15
அமெரிக்க அதிபர் ட்ரம்பை பதவிநீக்க வேண்டும் என்று சபாநாயகர் நான்ஷி பெலோஷி முன்வைத்த கோரிக்கையை துணை அதிபர் மைக் பென்ஸ் மறுத்துள்ளார்.
பைடனுக்கான வெற்றிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் ஏற்படுத்திய கலவரத்துக்கு ட்ரம்பே காரணம் என்று தெரிவித்து அவரை பதவி நீக்கும் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் முன்னெ டுத்த நான்சி பெலோஷி, குறித்த தீர்மானத்தை துணை அதிபர் பென்ஸுக்கு அனுப்பி வைத்தார். எனினும் இந்தத் தீர்மானத்தின்படி ட்ரம்பை பதவிநீக்க மறுத்துள்ளார் துணை அதிபர் பென்ஸ்.
கொரோனா வைரஸ் பரவல், லட்சக்கணக்கான அமெரிக்க மக்களின் பொருளாதாரப் பாதிப்பு, ஜனவரி 6ஆம் திகதி நடந்த கலவரம் ஆகியவற்றுக்கு மத்தியில் அமெரிக்க மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டிய நேரம் இது.
அந்த ரணங்களை நாம் ஆற்ற வேண்டும். ஆதலால், மேலும், நாம் நமக்குள் பிளவுபடுத்திக் கொள்ளாமல், சூழலைக் கொதிப்படையச் செய்யாமல் நகர்த்த வேண்டும். பதற்றமில்லாமல் எங்களுடன் பணியாற்றி, நாட்டை ஒற்றுமையாக வைத்திருத்திருந்து, அமெரிக்காவின் அடுத்த அதிபராக வர இருக்கும் ஜோ பைடனை வரவேற்போம்.
நான் தொடர்ந்து என்னுடைய பங்களிப்பை உங்களுக்க நல்ல முறையில் வழங்குவேன். அதிகாரமாற்றம் முறைப்படி இருக்கும் என்பதை உறுதியளிக்கிறேன்.
நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நடந்த சம்பவம் அமெரிக்க மக்களுக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் அளித்துள்ளது. அதிபர் ட்ரம்ப்பின் பதவிக்காலம் முடிய இன்னும் 8 நாள்கள் இருக்கும் நிலையில் அவரைப் பதவிநீக்குவது சரியல்ல - என்று பென்ஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# உச்சக்கட்டப் பாதுகாப்பில் அமெரிக்காவின் தலைநகர்

வொஷிங்டன், ஜன. 15
அமெரிக்காவில் இந்த வாரம் ஆட்சி மாற்றம் இடம்பெறவுள்ள நிலையில் தலைநகரான வொஷிங்டனில் உச்சக்கப்பட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.
பைடனின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக கடந்த வாரம் நாடாளுமன்றம் கூடியது. இதன்போது ட்ரம்பின் ஆதரவாளர்களால் பெரும் கலவரம் ஏற்படுத்தப்பட்டது.
இதில் ஐந்து பேர் உயிரிழந்தனர். இதையடுத்து அடுத்தடுத்த நாள்களில் மேலும் கலவரங்கள் வெடிக்கலாம் என்பதால் வொஷிங்டனில் ஊரடங்கு உத்தரவும் அவசர நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் அமெரிக்க கொங்கிரஸ் கட்டடம், நீதிமன்றங்கள், வெள்ளை மாளிகை ஆகியவற்றுக்கு உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (ம)






# சிரியாவுக்குள் அத்துமீறி இஸ்ரேல் வான்தாக்குதல்

டெல்அவிவ், ஜன. 15
இஸ்ரேல் வான்படைகள் சிரியா வுக்குள் உள்நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஈரானின் ஆதரவுபெற்ற கிளர்ச்சியாளர்கள் உள்ளிட்ட 57 பேர் கொல்லப்பட்டனர்.
உள்நாட்டுப் போரைச் சந்தித்துள்ள சிரியா இஸ்ரேலின் பரம எதிரியாக உள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள் சிரிய எல்லைக்குள் செயற்படுகின்றன.
இவற்றுள் பல இஸ்ரேலுக்கு எதிராகவும் துருக்கி மற்றும் ஈரான் ஆகியவற்றுக்கு ஆதரவாகவும் வேவு பார்க்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றன. இதனால் இஸ்ரேல் அவ்வப்போது அத்துமீறி சிரியாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தும். அவ்வாறான பின்னணியில்தான் நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. இதில் 57 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (ம)

# வீரியமடைந்த கொரோனா 50 நாடுகளில் பரவியுள்ளது

லண்டன், ஜன. 15
வீரியடைந்த கொரோனா வைரஸ் உலகின் 50 நாடுகளில் பரவியுள்ளது என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
'பிரிட்டனில் முதலில் கண்டறியப்பட்ட உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் தற்போது 50 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸ் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதால் தொற்று எண்ணிக்கை அதிகரிக்கும்' - என்றுள்ளது. (ம)



# ரஷ்யா திரும்புகிறார் அலெக் ஷி நவால்னி

நஞ்சூட்டப்பட்ட நிலையில் ஜேர்மனியில் சிகிச்சை பெற்றுவரும் ரஷ்ய எதிர்கட்சித் தலைவர் அலெக் ஷி நவால்னி மீண்டும் ரஷ்யா திரும்ப விருப்பம் தெரி வித்துள்ளார். இதுகுறித்து அலெக்ஸி நாவால்னி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னை கொலைச் செய்ய உத்தரவு பிறப்பித்த ரஷ்ய அதிபர் புடின் தனது பணியாளர்களுக்கு என்னை நாடு திரும்பாமல் செய்ய உத்தரவிட்டிருக்கிறார். ஜனவரி மாதம் 17ஆம் திகதி நான் ரஷ்யா வருகிறேன்' என்று பதிவிட்டுள்ளார். (ம)

# தைப்பொங்கல் சிறப்பு வழிபாடு





மன்னார்.ஜன.15

தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்றுக் காலை வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பக்தர்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் சுகாதார வழிமுறைகளுடன் இம் முறை ஆலயத்தில் தைப்பொங்கல் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட் டன.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து,கத்தோலிக்க ஆலயங்களிலும் பொங்கல் பொங்கி விசேட பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-56)

# ஒன்லைனில் பாலியல் வியாபாரம்

## புலனாய்வுப் பிரிவு கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன.15

நாடு முழுவதும் ஒன்லைன் ஊடாக பாலியல் சார் நடவடிக்கைகளுக்காக ,பெண்களைப் பயன்படுத்தும் நடவடிக்கை ஒன்று புலனாய்வு பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட இணையத்தளம் ஊடாக மோசமான தொழிலில் ஈடுபடும் பெண்களிடம் தினமும் 800 1000 ரூபா வரையில் பணம் அறவிடப்படுகின்றது என்று தெரியவந்துள்ளது.

தற்போது மேற்கொள்ளப்படும் விசாரணைக்கமைய இணையத்தள உரிமையாளருக்கு நாள் ஒன்றுக்கு இது தொடர்பான விளம்பரங்கள் பதிவிடுவதற்காக ஒன்றரை லட்சம் ரூபாவுக்கும் அதிக பணம் கிடைக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒன்லைன் தொழில்நுட்பம் ஊடாக கற்கும் பெண்களை ஏமாற்றி பல்வேறு இடங்களுக்கு அழைத்து பணம் பெறும் நடவடிக்கையிலும் இந்த மோசடிக் கும்பல் ஈடுபட்டுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ருக்என புலனாய்ப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டிய பொலிஸ் பிரிவில் பாடசாலை மாணவி ஒருவர் மோசமான நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் பணம் வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினையில் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார். இந்த மோசடி நடவடிக்கை தொடர்பில் 150 பெண்கள் தினமும் இணையத்தளத்தில் விளம்பரம் பதிவிடுகின்றனர் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ப)

## மரண அறிவித்தல்



### வேலாயுதபிள்ளை அன்னம்மா

தோற்றம் 1932 . 10 . 28 — மறைவு 2021 . 01 . 14

சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை அன்னம்மா நேற்று (14.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா வேலாயுதபிள்ளையின் மனைவியும், அமரர் சரவணபவன், அமரர் சத்தியபகவான், இந்திரபவானி, சண்முகபவான் (லண்டன்), ஆகியோரின் தாயாரும், பாலகிருஷ்ணனின் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலயக் கல்வி அலுவலகம்-சாவகச்சேரி), சிவகங்கா (லண்டன்), அனுஷா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், சத்தியசுதன்-சோபியா, தஸாந்தி-பேரின்பன், சத்தியகுகன், பிரசாந்தி, விஷ்ணுகன், சாமினா, விபிஷ்ணா, ஹரணி ஆகியோரின் பேர்த்தியும், ஆருக்ஷ், இஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 309 0517

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 06 . 1940 — மறைவு 14 . 01 . 2021

### தம்பையா சோமசுந்தரம்

கோப்பாய் பிரமனோடையைப் பிறப்பிடமாகவும், கந்தசுவாமி கோயிலடி, கோப்பாய் வடக்கு கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சோமசுந்தரம் நேற்று (14.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், ருக்மணியின் அன்புக் கணவரும், வசுமதி, கோமதி (நோர்வே), மதுமதி (ஆசிரியை), தனுஜா, நிறுஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அருமைத் தந்தையும், சரத்விஜயானந்தன் (ஜெயசக்தி Transport), தனநாதன் (Electrical Technician - நோர்வே), கிருபானந்தம் (Technical Officer -Mannar), சதீஸ்வரன் (ஏஞ்சல் ஒப்டிக்கல் - மன்னார்), தயாரூபன் ( Rupan Crusher) ஆகியோரின் பாசமிகு மாமனும்,காலஞ்சென்றவர்களான ராஜேந்திரம், இராசமணி, விஸ்வலிங்கம், மனோன்மணி மற்றும் சொர்ண லக்சுமி, சபாரத்தினம் ஆகியோரின் சகோதரனும், பத்மாவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற மனோகரன் (கனடா), மகேந்திரன் (லண்டன்), புஸ்பராணி, தவேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ரவீந்திரன், வதனி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சதுசன் (Auto Mobile Engineering From IDEAL Motors) கரிசன், கர்சியா, கனோஜன் (Dental Sudent - Norway), பவானுஜன், கரணி, ரிதூசன், பிரியகன், கவிஷானி, ஜஸ்வியாவின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசுவாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு.

தகவல் : குடும்பத்தினர்
076 143 8482

## மரண அறிவித்தல்



### வைத்தியலிங்கம் தங்கம்மா (இளைப்பாறிய ஆசிரியர்)

சங்கத்தானையை பிறப்பிடமாகவும் மருதனார்மடத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் தங்கம்மா (டிறிபேக் கல்லூரி ஆசிரியர்) நேற்று (14.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சின்னம்மாவின் அன்பு மகளும், வல்லிபுரம் சிவ. வைத்தியலிங்கம், (ஆசிரியர் - அமரர், டிறிபேக் கல்லூரி) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவநேசன் (அவுஸ்திரேலியா), லதா (ஆசிரியர் - யாழ்ப்பாண கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், லோஜினி (அவுஸ்திரேலியா) பத்மநாதன் (விவசாய போதனாசிரியர், யாழ்ப்பாண கல்லூரி) அவர்களின் மாமியாரும், பிரணவன் (அவுஸ்திரேலியா) பிரியா (அவுஸ்திரேலியா), தீபிகா (ஆசிரியர்- உடுவில் மகளிர் கல்லூரி), மௌலிகா (NDB வங்கி, யாழ் கிளை) மாதுளன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பேர்த்தியும், கிருபாராணி, கருணாகாந்தி, துரைசிங்கம் புஸ்பராணி ஆகியோரின் பெறாதாயும், பொன்னுத்துரை, செல்லம்மா, சின்னத்தம்பி, சரஸ்வதி, Dr.சுப்பிரமணியம் (அமரர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை தற்காலிக மருதனார்மட யாழ் கல்லூரி விவசாய நிறுவனம் சுன்னாகம் எனும் இடத்தில் 11 மணிக்கு நடைபெற்று, சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
லதா பத்மநாதன் (மகள்)
யாழ் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம்.

## மரண அறிவித்தல்



மலர்வு 06 . 07 . 1943 — உதிர்வு 14 . 01 . 2021

### திருமதி தேவவதி கதிர்காமநாதன்

மண்டைதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவவதி கதிர்காமநாதன் நேற்று (14.01.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் கலைமகள் (ஜேர்மனி) பாமினி (பிரான்ஸ்) பிறேமினி (இங்கிலாந்து) காஞ்சனா, பிரசாந்தியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுரேஷ்குமார் (ஜேர்மனி), கருணாகரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (இங்கிலாந்து) சுகிர்தராஜ், மற்றும் வஜீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்தியா, லக்ஷயா, சரன் (ஜேர்மனி) கஜனிகா, கனிஸ்கா, கனுஜன் (பிரான்ஸ்), சானுஜன், சௌமியா (இங்கிலாந்து), கிரிசனா, கிரிசன், ரிசான், ஹர்நிஷா, கஜநிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கமலாம்பிகை, காலஞ்சென்ற மங்கயற்கரசி மற்றும் சரஸ்வதி, திலகவதி, திருஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன் மற்றும் யோகநாதனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இலக்கம் 448 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பா.வஜீந்திரன் (மருமகன்)

# நடத்துநர் வெட்டிக் கொலை

மாத்தறை, ஜன.15

பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தில் வைத்து அதன் நடத்துநர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் ஒன்று மாத்தறை - வெலிகமயில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. வேறொரு பேருந்து நடத்துநர் ஒருவராலேயே இவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. (வ-இ)

# மணிவிழா வாழ்த்துக்கள்

யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர்

## திருமதி யோகேஸ்வரி பஞ்சாட்சரம்

(S.L.T.S 1)



**சேவை விவரம்**

1988-1992 - யா/கைதடி சேதுகாவலர் வித்தியரலயம்

1992-1993 - யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை

1994-2010 - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

2010-2021 - யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்

15.01.2021 இல் அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் நாயகியை மனதார வாழ்த்திடுவோம்.

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்**
**யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்**



# அம்மாவின் விண்ணக வாழ்வில் 16 ஆம் ஆண்டு

## திருமதி லில்லி தேவசகாயம்



தன்னலம் அற்ற அன்பிற்கு
பொருள் சேர்த்து
அன்பே உலக சுழற்சியின் அச்சு
என்பதற்கிணங்க
அன்பிலே எம்மை வாழ வைத்து
ஆன்மீக வாழ்வை நாம் வாழ
வழிகாட்டிய உங்களது ஆளுமை
ஆச்சரியப்படத்தக்கது அம்மா.
தேவதூதர்களே அல்லாமல் வேறொருவரும்
அறியாத மகிழ்ச்சியையும்
ஆண்டவன் பாதத்தில் நாம் எல்லோரும்
மறுபடியும் சந்திபோம்
எம் விசுவாசத்தில்
மீண்டும் உங்களை சந்திப்போம்
இறைபாதங்களில்
ஆமேன்

**இறப்பு: 16.01.2004**

**இல.28, றக்கா லேன்,**
**சுண்டுக்குளி.**

**அன்புப் பிள்ளைகள்.**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**பூட்டப்பிள்ளைகள்**



# மரண அறிவித்தல்



## மனுவல் ஞானப்பிரகாசம் (செல்வம்)

மண்டைதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் ஞானப்பிரகாசம் (செல்வம்) என்று அழைக்கப்படும் அன்னார் நேற்று (14.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற மனுவல் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், சவீனம்மாவின் (லீலா) அன்புக் கணவரும், ஞானசேகர், சந்திரசேகர், சுதாசினி, சுபாசினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோன்சன், சிவா, வனிதா, சுவித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், யதுர்சன், டியூசன், டிலோஜன், டர்மிகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மரியநாயகம், மருசலின், செசிலியம்மா, பங்கிராஸ் மற்றும் ஆரோக்கியம், ஞானசவுந்தரி, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, அன்ரன், சிங்கராயர், மரியாம்பிள்ளை மற்றும் தவமணி, சந்தனமேரி, எலிசபெத், வசந்தா ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்கலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 069 1504**
**077 662 8430**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


# திருடினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் கட்டிவைத்து தாக்குதல்

கொழும்பு, ஜன. 15

திருடினார் என குற்றம் சுமத்தப்பட்ட 18 வயதான இளைஞர் ஒருவர் பேருந்து நிலையத்தில் கட்டிவைத்து பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் பண்டுவஸ்நுவர பகுதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், பொதுமக்கள் சட்டத்தைக் கையிலெடுப்பது பெரும் குற்றம் என்று தாக்கியோர்களைக் கண்டித்தனர்.

(த-இ)


**சிறுநீரகம் தேவை**

B,O குருதி வகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு:**076 239 9874**



# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30 . 11 . 1938 | 14 . 01 . 2021 |



## திருமதி சறோஜினி தேவசகாயம்

**(இளைப்பாறிய அரசாங்க தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்)**

வட்டுகோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி தேவசகாயம் காலமானார்.

அன்னார் காலம்சென்ற திரு பொன்னம்பலம் (இளைப்பாறிய அரசாங்க கணக்காளர் யாழ். கச்சேரி) காலஞ்சென்ற திருமதி சிவக்கொழுந்துவின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நடராஜ தேவசகாயத்தின் (பொறியியலாளர்-கொழும்பு) அன்பு மனைவியும், மனோகரன் (வங்கி முகாமையாளர்- பிரிட்டிஷ் வங்கி, சவுதி) பிரியதர்ஷினி (நிர்வாக உத்தியோகத்தர்-லண்டன்) தேவதர்ஷினி (கணக்காளர்-அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், துளசி (அவுஸ்திரேலியா), குகதாசன் (லண்டன்) பராபரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அர்திகா (அவுஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழகம்) ஹரிஸ்வரன் (அவுஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழகம்) குமாரன் (வேல்ஸ் பல்கலைக்கழகம் UK) கஜன் (குயின் மேறிஸ் பல்கலைக்கழகம் UK) அஞ்சலீன், யோசுவா, அவர்களின் பாசமிகு பேத்தியாரும் ஆவார். இறுதிக்கிரிகைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

**தெல்லிப்பளை வீதி,**
**வட்டுகோட்டை.**

**தகவல் : பிரியா லண்டன்** - 00447903837869
**குகன் லண்டன்** - 00447958453290
**துசி வட்டுகோட்டை** - 0740868218



# மரண அறிவித்தல்



## இராமலிங்கம் நடராசா

நயினாதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நடராசா நேற்று (14.01.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், நாகமணி ஆசப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் சிவகுமாரன் மற்றும் மதிவதனா, நிரஞ்சனா, சிவரஞ்சனா, நந்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் ஸ்ரீதயாளன் மற்றும் தயாகரன், அமரர் இரத்தினராஜ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌசல்யா, கௌதமி, கௌசிகன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2021) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிவரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**6ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## வேலுப்பிள்ளை மனோகரன்

(ஓய்வுநிலை - யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி)

திதி: திருதிகை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26.12.1955 | 07.02.2019 |


பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர் நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஈராண்டு மறைந்ததையா!
எம் உள்ளங்களில் என்றும்
- நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

என்றும் நினைவில்
குடும்பத்தினர்
வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்.
076 611 0128

காளி துணை

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 12 |
| 05 | 01 |
| 1958 | 2021 |



## திரு. சபாநாயகம் கலைஅரசன்

(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்- சுன்னாகம்)

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் கலைஅரசன் 12.01.2021 செவ்வாய்க்கிழமை காளிதேவியின் பதார விந்தங்களை சென்றடைந்தார்.

அன்னார் நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாநாயகம் - மல்லாகத்தை சேர்ந்த காலஞ்சென்ற பராசக்தி தம்பதியினரின் அன்பு சிரேஷ்ட புதல்வனும் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தேவிகாராணியின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற மைதிலியின் அன்புக் கணவரும், கலைப்பிரியா (Business Reseacher & Consultant), பவித்திரா (Development Officer, Vet.Office-சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தை யும், காலஞ்சென்ற குக நேசனின் (UK) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.01.2021 புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, திருவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மில் லேன், மல்லாகம். மகள்கள்

# துயர் பகிர்கின்றோம்

பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திரு.துரைராசா சத்தியசீலன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## செல்லையா துரைராசா

அவர்கள் 16.12.2020 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
தென்மராட்சி பிரதேச செயலகம்
சாவகச்சேரி.

# ஆங்கில ஆசிரியர் தேவை

மானிப்பாயில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றிற்கு தரம்: 6 - 11 வரையான வகுப்புக்களிற்கு ஆங்கிலம் கற்பிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர் ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்.

021 225 5417, 077 585 0044

# தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் செல்லும் வழியில் NC XH 2361 (Pulsar-220F) மோட்டார் சைக்கிளின் வாகனப்புத்தகம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

0766001038, 0772387041



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2021 ஆண்டிற்கான பொருள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

ஆலயத்திற்கு 2021 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பின்வரும் பொருட்கள் வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் தரம் வாய்ந்த வழங்குநர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பூசைக்குரிய பொருட்கள்
2. விபூதி - குங்கும வகைகள்
3. வெற்றிலை - பாக்கு
4. கும்பவேட்டி
5. அன்னதானப் பொருட்கள்
6. மரக்கறி வகைகள்
7. வாழைக்குலைகள்
8. இனப்பழங்கள் - (பழவகைகள்)
9. தேங்காய்
10. பூமாலை கட்டுவதற்கான பூக்கள் (மகோற்சவ காலம்)
11. தாமரைப் பூக்கள் (மகோற்சவ காலம்)
12. கணிகளும் உதிரிகளும்
13. மின் உதிரிகளும் பொருத்திகளும் மின் உபகரணங்களும்
14. சீமெந்து கம்பி வகை பொருட்கள்
15. பெயின்ற் - பிரஸ் வகைகள்
16. கட்டிடப் பொருட்கள் - கண்டகல் - மணல் - ஆற்றுமணல் - சல்லிவகை -அரிகல் (கொங்கிறீட்)
17. வாகனத் திருத்தமும். வாகனச் சுத்திகரிப்பும்

விண்ணப்ப முடிவுத்திகதி : - 25.01.2021

ந.மோகனரூபன்
செயலாளர் - அறங்காவலர் சபை.
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.
நயினாதீவு.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2021 ஆண்டிற்கான பொருள் வழங்குநர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவம்

1. வியாபார நிறுவனத்தின் பெயர் : ........................................
2. நிறுவன உரிமையாளரின் பெயர்: ........................................
3. தொலைபேசி இலக்கம் :-.......................... கையடக்க தொ.இல :-............
4. வியாபாரத்தின் தன்மை : ........................................
5. பதிவு செய்யப்பட வேண்டிய பொருட்களின் தொகுதி

| தொகுதி இல | பொருட்களின் விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6. வங்கியாளர்களின் பெயர்கள் : ........................................
7. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி :-........................................
8. ஆலயம் சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் :-........................................
9. வழங்கப்பட்ட தகவல்களில் உண்மைக்குப் புறம்பானவை ஏதும் காணப்படுமாயின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
10. வழங்குநர்களுக்கு முற்பணம் ஏதும் வழங்கப்படமாட்டாது.
11. மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 500/= இலங்கை வங்கியின் ஆலய வங்கி கணக்கு இலக்கம் 7687860 இல் பணமாக வைப்பிலிடல். வைப்புச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

என்னால் வழங்கப்பட்ட மேற்படி விபரங்கள்யாவும் சரியானவை எனவும் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் வழங்குவதற்கு உடன்பட்டும் இத்தால் உறுதியளித்து ஒப்பமிட்டுக் கொள்கின்றேன்.

............................ ............................
விண்ணப்பதாரியின் ஒப்பம் திகதி

# பயன்படுத்தப்படாத கட்டடங்களின் விவரங்களை அனுப்பவும்

## கோருகின்றது திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜன. 15

வடக்கு மாகாணத்தில் பல்வேறு அரச திணைக்களங்கள் ஊடாக பல்வேறு தேவைகளுக்கும் அரச நிதியில் கட்டப்பட்டு பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள கட்டடங்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி, சுகாதாரம், விவசாயம், பொறியில் மற்றும் வடக்கு மாகாண அமைச்சுக்களின் கீழ்வரும் அரச நிறுவனங்களில் கடந்த 10 ஆண்டுகளுக்குள் கட்டப்பட்டு இது வரை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாத கட்டடங்களின் விவரங்களையே வடக்கு மாகாண பிரதிப் பிரதம நிதிச் செயலாளர் கேட்டுள்ளார்.

கட்டடங்கள் எவ்வளவு காலமாக பயன்படுத்தப்படாதுள்ளன, கட்டடம் எப்போது கட்டப்பட்டது, எவ்வளவு நிதி பயன்படுத்தப்பட்டது என்பது உட்பட 14 கேள்விகள் உரிய அரச நிறுவனங்களிடம் கோரப்பட்டுள்ளன. (த-50)

# சனி, ஞாயிறு காணி இணக்கசபை அமர்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாண மாவட்ட காணி இணக்க சபை நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9.30 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை விசேட காணி அமர்வுகளாக நடைபெறவுள்ளது. காணிப்பிணக்கு தொடர்பாக ஏற்கனவே அறிக்கை செய்தவர்கள் உரிய ஆவணங்களுடன் யாழ். மத்திய கல்லூரிக்கு உரிய நேரத்துக்கு வருகை தருமாறு கோரப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட மட்டத்தில் காணிப் பிணக்கு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வோர் 5 ரூபா முத்திரை, காணிப்பிணக்கு தொடர்பான விவரணக் கடிதம், நில அளவைப் படம் மற்றும் ஆவணங்களுடன் வருகை தருமாறு தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (த-50)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 02 . 1934

மறைவு 27 . 01 . 2020

## அமரர் தங்கம்மா இராசையா

திதி: திருதியை (15.01.2021)

ஆண்டொன்று கடந்தாலும் அகலாது
உங்கள் நினைவு
அம்மா அம்மா என்று அழைக்கின்றோம்
கேட்கவிலையோ...

"எங்கு தேடி அலைந்தாலும் நாம்
மீண்டும் அமர முடியாத சிம்மாசனம்
தாயின் கருவறை தான்"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 . 01 . 1951 உதிர்வு 15 . 01 . 2009

M.யோன்மேரி



மலர்வு 14 . 12 . 1981 உதிர்வு 22 . 10 . 2008

J.லூட்ஸ் சுபாசினி



மலர்வு 10 . 04 . 1991 உதிர்வு 15 . 01 . 2009

J.யூட் சுஜிவன்



மலர்வு 03 . 05 . 1995 உதிர்வு 24 . 01 . 2009


J.யூட் சுபாசன்

நிஜமாக நீங்கள் மறைந்து
பன்னிரண்டு ஆண்டுகள் ஆனதோ
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவே!!!
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்....

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



பிறப்பு 23 . 02 . 1924

இறப்பு 13 . 01 . 2021

## சின்னத்தம்பி வள்ளியம்மை

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நாகமணி அன்னப்பிள்ளையின் மகள் வள்ளியம்மை 13.01.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், செல்லப்பா தங்கமுத்துவின் மருமகளும், தெய்வானையின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிரித்தம்பியின் மைத்துனியும், சறோஜினிதேவி, மகேஸ்வரன், காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் சிவனேஸ்வரன், சாந்தினி தேவி (ராதா), வசந்தாதேவி (செல்வி), றசிதேவி (விசி) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவராஜா, ராணிவிமலா, பூபதிதேவி, மாலினி, துரை நாயகம், காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் 17.01.2021 (ஞாயிற்றுக் கிழமை) ந.ப. 12.00 மணியளவில் இடம்பெறும்.

தொடர்பு:
077 843 9796 (சிவா - ஏழாலை )
996 249 5168
735 856 2183 (இந்தியா)
988 445 9090
+ 417 892 52240 (செல்வி)
+ 416 893 5904 (சிவம்)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ஓம் சிவம்

# மரண அறிவித்தல்



பிறப்பு 10 . 01 . 1930 (சிங்கப்பூர்)

இறப்பு 02 . 01 . 2021 (பிரித்தானியா)

## என்.விஜயசிங்கம் JP

(ஐரோப்பிய ஒன்றிய தென்னாசிய தூதுவராலய முன்னாள் ஆலோசகரும், மேற்கு ஜேர்மனியின் பொன் நகரை மையமாகக் கொண்டு செயற்பட்ட ப்ரெட்றிக் ஈபேர்ட் நிறுவகத்தின் Friedrich Eberd Foundation (EFS) முன்னாள் ஆலோசகரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக சபையின் முன்னாள் அங்கத்தவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னாள் ஆலோசகரும், இலங்கை உள் நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முன்னாள் வரி மதிப்பீட்டாளரும், அரச எழுது வினைஞர் சேவைகள் சங்கத்தின் (GCSU) முன்னாள் துணைப் பொதுச் செயலாளருமான)

மேற்கு அல்வாயைச் சேர்ந்த நடராஜா விஜயசிங்கம் இம்மாதம் 2 ஆம் திகதி லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி A.V.நடராஜா தம்பதியின் சிரேஸ்ட புதல்வரும், தனலக்சுமியின் அன்புக் கணவரும், ஷியாமா, இந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், டாக்டர் ப்ருந்தா (றட்ணா), வீணா ( சீதா) ஆகியோரின் மாமனாரும், அபிராம், லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும், உருத்திரசிங்கம், திருமதி ஈஸ்வரதேவி வல்லிபுரநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (19.01.2021) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 23, Mathias Housae, Epsom, Surrey, KT18 7RX என்ற இடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, காலை 9 மணிக்கு Randall's Park Crematorium, Randalls Road, Leatherhead, KT22 0AG இல் உள்ள மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

**தற்போதுள்ள Covid சூழலில் யாரும் பங்கேற்க முடியாதபோதும், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.**

அன்னாரின் பிரிவுச் செய்தியை அறிந்து உலகெங்கும் இருந்து தமது வருத்தத்தையும், நினைவுகளையும் பகிர்ந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும், எமது குடும்பத்தார் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இந்திரன் (மகன் - 44 (0) 7860 416 978**
**ஷியாமா (மகள் - 44 (0) 7718 158 250**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
# 24.02.2021 மற்றும் 25.02.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 24.02.2021 மற்றும் 25.02.2021 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்கு மாறு கோருகின்றேன்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. பண்பாட்டுக் கற்கையில் முதுகலைமாணி - 2020
4. சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி - 2017
5. கல்வியியலில் முதுமாணி
6. முது வியாபார நிர்வாகமாணி
7. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (முழுநேரம்)-2017
8. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (முழுநேரம்) -2018
9. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (பகுதிநேரம்) -2019 – வவுனியாவளாகம்
10. இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2020
11. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2020
12. மருத்துவ விஞ்ஞானமாணி - 2012
13. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி – 2017
14. சித்தவைத்திய மற்றும் சத்திரசிகிச்சைமாணி – 2018
15. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
16. தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
17. மருந்தகவியல்மாணி (சிறப்பு) – 2017
18. மருந்தகவியல்மாணி (சிறப்பு) – 2018
19. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
20. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
21. விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017
22. விஞ்ஞானமாணி (பொது) – 2017
23. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி – 2017
24. கணனி விஞ்ஞானத்தில் (சிறப்பு) விஞ்ஞானமாணி – 2018
25. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி –2017
26. கலைமாணி (சிறப்பு) – 2017
27. கலைமாணி (சிறப்பு) – 2018
28. கலைமாணி (பொது) – 2017
29. கலைமாணி (பொது) – 2018
30. நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம்) – 2017
31. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) – 2017
32. நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) – 2017
33. சட்டமாணி - 2018
34. வியாபார நிர்வாகமாணி – 2017
35. வியாபார நிர்வாகமாணி (பொது) – 2017
36. வணிகமாணி – 2017
37. வணிகமாணி – 2018
38. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2018
39. பொறியியல் விஞ்ஞானமாணி – 2018
40. பொறியியல் விஞ்ஞானமாணி – 2019
41. பிரயோகவிஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) – 2017 வவுனியா வளாகம்
42. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமாணி (பொது)
43. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
44. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
45. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது)
46. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பீடலும்) (பொது)
47. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)
48. வியாபார முகாமைத்துவமாணி (பொது)
49. வியாபார முகாமைத்துவமாணி (சிறப்பு)
50. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள்படிவங்கள்:**
விண்ணப்பதாரிகள் வேண்டுகோள் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

**2. கட்டணங்கள்**

**இளமாணிப் பட்டதாரிகள்**

| | | |
|---|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. | 750.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. | 750.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. | 700.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா | 600.00 |
| **மொத்தம்** | | **2800.00** |

**பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள்**

| | | |
|---|---|---|
| பட்டமளிப்புவிழாக் கட்டணம் | ரூபா. | 2000.00 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | ரூபா. | 1000.00 |
| பட்டச்சான்றிதழ் கட்டணம் | ரூபா. | 1000.00 |
| புகைப்படக் கட்டணம் | ரூபா | 600.00 |
| **மொத்தம்** | | **4600.00** |

குறிப்பு: பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. கட்டணம் செலுத்தும் முறை**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடவும்.

**கீழே தரப்பட்ட பொருத்தமான குறிப்பிலக்கத்தையே குறிப்பிடுக.**

* **இளமாணிப் பட்டதாரிகள்**
நேரில் சமுகமளிப்போர் - 970000052100308
சமுகமளிக்காதோர் - 970000052100340

* **பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள்**
நேரில் சமுகமளிப்போர் - 970000082100310
சமுகமளிக்காதோர் - 970000082100351

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். **மேற் குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**4. பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச் சீட்டும்**
நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கான ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினர் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையில் வழங்கப்படும்.

**5. பல்கலைக்கழக நிலுவைகள்**
பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

**6. வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்**
பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச் சீட்டின் மூலப் பிரதி மற்றும் பட்டச் சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பத்தினையும் இணைத்து **பதிவுத்தபால்** மூலம் கீழ்க்காணும் முகவரிகளில் பட்டத்திற்கு தொடர்பான முகவரிக்கு 29.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் "35வது பட்டமளிப்பு விழா வேண்டுகோள் படிவம்" எனக் குறிப்பிடவும்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்:**
**உதவிப் பதிவாளர்/அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவர்கள்:**
**பிரதிப் பதிவாளர்/ பரீட்சைகள் கிளை,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

கடவுச்சீட்டு அளவு (35mmX45mm) உடைய வெற்றுப் பின்புலத்துடனான புகைப்படம் ஒன்றினை வேண்டுகோள் படிவத்துடன் இணைத்து அனுப்புவதுடன், அதனது மென் பிரதியை கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு பல்கலைக்கழக மாணவர் பதிவி இலக்கத்தினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு உதவிப் பதிவாளர்/அனுமதிகள்கிளையின் தொலைபேசி இலக்கம் 021 222 6714 அல்லது ar.admissions@yahoo.com எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும். முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 29.01.2021**

**பதிவாளர்**

## நேற்றும்....

அதிகரித்துள்ளது.
இவர்களில் 43 ஆயிரத்து 747 பேர் குணமடைந்துள்ளனர். 6 ஆயிரத்து 905 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ-22)

## முல்லையில்...

என.
முல்லைத்தீவு அளம்பில் பிரதேசத்தில் வெடிமருந்து நிரப்பப்பட்ட குழாய், 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு இரண்டு, ஆர்.பி.ஜி. குண்டின் சார்ஜர்கள் நான்கு, வோக்கி டோக்கி ஒன்று, 81 மில்லிமீற்றர் மோட்டார் குண்டு ஒன்றின் பின்பக்கம் இரண்டு, 40 மில்லிமீற்றர் எம்.பி.எம்.ஜி. குண்டுகள் மூன்று என்பன மீட்கப்பட்டன. இதேவேளை சாலைப்பகுதியில் ஆர்.பி.ஜி. குண்டுகள் இரண்டு, கைக்குண்டு இரண்டு, மிதிவெடி ஒன்று, ஆர்.பி.ஜி. குண்டின் பாகம் ஒன்று, டெட்டனேட்டரின் பகுதி ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளன. இரு பகுதிகளிலும் மீட்கப்பட்ட வெடி பொருள்கள் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவற்றைத் தகர்த்து அழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ-19)

## 32 மாதங்களில்...

8 மாதங்களில் (32 மாதங்களில்) விடுதலையாகலாம். இந்தத் தகவலை சிறைச்சாலை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய உறுதிப்படுத்தினார்.
'சிறைத்தண்டனை அனுபவிக்கும் எந்தவொரு கைதியும் நன்னடத்தையுடன் செயற்பட்டால் மூன்றில் ஒரு மன்னிப்பு காலம் கிடைக்கும். அதாவது ஒரு வருடமெனில் 8 மாதங்கள் தண்டனை. நான்கு மாதங்கள் விடுப்பாகும்' என்றும் அவர் கூறினார்.
இதன்படி ரஞ்சன் ராமநாயக்க நன்னடத்தையுடன் செயற்படுவாரெனில் வருடமொன்றுக்கு 4 மாதங்கள் அவருக்கு தண்டனைக் குறைப்பு வழங்கப்படும். 4 வருடங்களுக்கு 16 மாதங்கள் தண்டனை குறையும். எனவே, அவர் 2 வருடங்கள் 8 மாதங்களில் வெளியில் வரக்கூடும் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-44)

## மன்னார்...

ட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சென்ற ஒருவர் நோயாளர் விடுதி இலக்கம் 2 இல் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், அவருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்தே விடுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
மன்னார் மருத்துவமனைப் பணியாளர்களுக்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருந்த நிலையில், அந்த விடுதியில் பணியாற்றியவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டதுடன், அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தநிலையில் மன்னார் மருத்துவமனையில் பணியாற்றும் தாதி ஒருவருக்கே நேற்றுக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைக்குக்கு நோயாளர்களைப் பார்வையிடல் போன்ற அத்தியாவசிய காரணங்களுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று மன்னார் மருத்துவமனை நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. (எ-இ)

## நல்லூர்...

நல்லூர் ஆலயத்திலிருந்து, திறப்பு விழாவுக்குத் தேவையான பொருள்கள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டிலில் வளைவு அமைந்துள்ள இடத்துக்கு எடுத்துவரப்பட்டன.
நாதஸ்வரம் இசைக்க, சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்களைப் பாராயணம் செய்ய, இறையாசியுடன் அலங்கார வளைவு திறக்கப்பட்டது.
சிவாச்சாரியர்கள், சைவசமயப் பெரியவர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர், உறுப்பினர்கள், அதிகாரிகள், நல்லூர் கந்தசுவாமி ஆலய பரிபாலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ)

## இனப்படுகொலை...

என்று கோரி, இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் தண்டித்தலுக்கான சர்வதேச மையம் (ICPPG) ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு மனு அனுப்பியுள்ளது.
யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்தழிக்கப்பட்டமைக்கு சர்வதேச மையம் இந்த மனுவில் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.
அந்த மனுவில் உள்ளதாவது-
2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நினைவாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்டதே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி.
இது வெறுமனே கல் மற்றும் மண்ணால் கட்டியெழுப்பப்பட்ட கட்டடம் அல்ல. உணர்ச்சிகளின் உறைவிடம். இறந்தவர்களை நினைவுகூரும் அடிப்படை உரிமையைக்கூட இலங்கை அரசு பறித்து வருகின்றது. இதுமட்டுமன்றி, தமிழர்களின் பூர்வீக இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. தமிழர்களின் கலாசார, மத அடையாளங்களையும் அழித்து வருகின்றது.
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு காரணமான அரசே தற்போது மீண்டும் ஆட்சியிலுள்ளது. அது இனப்படுகொலைக்கான ஆதாரங்களை அழித்துவருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை கவனமாகவும் சீராகவும் அகற்றியது.
இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்துக்கான அடிக்கல் மீண்டும் அதே இடத்தில் நடுவதற்கு துணைவேந்தர் அளித்த வாக்குறுதியை வரவேற்பதோடு அதனைக் குறிப்பிட்ட காலத்தினுள் உரிய குழுக்களை அமைத்து விரைவில் பூர்த்திசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். என்றுள்ளது.
தமிழ் சமூகம் சார்பாக, சர்வதேச மையம் அமைப்பின் பணிப்பாளர் திருமதி. அம்பிகை செல்வரத்தினம் மற்றும் ஊடக இணைப்பாளரும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் பட்டதாரியுமான திருமதி. கிரிஸ்டி நிலானி காண்டீபன் ஆகியோர் கையொப்பமிட்டு, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு மனு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (த-இ)

## கிளி.....

என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. காட்டு பகுதியின் ஊடாக நுழைந்தவர்கள் பாதுகாப்பு வேலியை கடந்து சிலையைச் சேதமாக்க முயற்சித்துள்ளனர். ஆயினும் சிலை எவ்வித சேதங்களுக்கும் உள்ளாகவில்லை எனவும், அதன் மேல் பகுதியில் மட்டும் சிறு உரசல் அடையாளங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.
இனங்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும் வகையில் விசமிகள் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. (ஒ-6)

## கொரோனாவை...

அவர்கள் கொரோனா தடுப்பு சுகாதார விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் இரணைமடுக் குளத்தைப் பார்வையிட வருகின்றனர். அவர்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை என்றும், பெருமளவானோர் முகக் கவசங்கள் கூட அணிவதில்லை என்றும், தனிநபர் இடைவெளியும் அங்கு பேணப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-214)

## இனவெறி...

இறுதிப் போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அவர்களின் உறவுகள் நினைவாக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் தூபி இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
போரில் உயிரிழந்த தமது உறவுகளைப் பகிரங்கமாக நினைவுகூரக் கடந்த நல்லாட்சியில் சகல இன மக்களுக்கும் நாம் அனுமதி வழங்கியிருந்தோம். ஓர் இனத்தைக் குறிவைத்து இந்த நினைவேந்தல் உரிமையை இந்த அரசு தட்டிப் பறிப்பது பெரும் மனித உரிமை மீறலாகும். இது சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும். அத்துடன் இலங்கை மீதான சர்வதேசத்தின் அழுத்தங்களை மேலும் அதிகரிக்கச் செய்யும்.
நினைவேந்தல் உரிமையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பாகுபாடு இருக்கவே கூடாது. இந்தப் பாகுபாடு நாட்டின் நல்லிணக்கத்துக்குப் பெரும் குந்தகம் விளைவிக்கும். இனவெறி, மத வெறி மற்றும் போர் வெறி கொண்டவர்கள் ஆட்சிப்பீடத்தில் இருந்தால் அது நாட்டுக்கே சாபக்கேடு-என்றார். (எ-22)

## கொவிட்...

மருத்துவர் ஒருவருக்க கொரோனா தொற்று 3 நாள்களுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் அவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படவில்லை. சுகாதார அதிகாரிகளும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.
இது தொடர்பான தகவல் ஊடகங்களில் வெளிவந்த நிலையில், அவர் நேற்றுச் சிகிச்சை நிலையத்துக்கு ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.
சாதாரண பொதுமகன் விடயத்தில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் ஒரு விதமாகவும், அதிகாரமுள்ள, செல்வாக்குள்ள தரப்பினரிடத்தில் வேறொரு விதமாகவும் சுகாதார அதிகாரிகள் பிரயோகிக்கின்றமை தொடர்பில் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.
இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் தான் அறியவில்லை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-18,110)

## வடக்கில்...

என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
மன்னாரில் அண்மையில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்த 4 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
மன்னார் பொது மருத்துவமனையில் பணியாற்றும் தாதி ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
முல்லைத்தீவில் இரு பெண்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டவர்கள் பணியாற்றும் கடையில் பணியாற்றுபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா செட்டிக்குளத்தைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை காங்கேசன்துறை கடற்படை முகாம் தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள கடற்படைச் சிப்பாய் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 60 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. (எ-26)

## நிவாரணத்தில்...

செயலகத்துக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் விநியோகத்தில் மோசடி நடந்தது என எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு முன்னிலை யாகுமாறு ஆணைக்குழு கடிதம் அனுப்பியிருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் விசாரணைக் குழுவில் முன்னிலையாகியுள்ளார்.
கொரோனா இடர் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டம் முடக்கப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்துக்கு தன்னார்வக் கொடையாளிகள் நிவாரணங்களை வழங்கியிருந்தனர். இவை விநியோகிக்கப்பட்டதில் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றது என இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
விநியோகத்தில் குளறுபடி மற்றும் அரசியல் இடையூறுகள் என்பன குறித்தும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டிருந்தன. இந்த நிலையில் இது தொடர்பான விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)





தைப்பொங்கல் தினமான நேற்று உதயன் பத்திரிகையில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வின் பதிவுகள் சில.

பொலிஸ் சேவையில்

# சட்டத்தரணிகள் இணைப்பு: மீள்பரிசீலனை செய்யவும்!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

**கொழும்பு, ஜன.15**
**சட்டத்தரணிகள் 150 பேரை பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக பொலிஸ் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்ள மேற்கொண்டுள்ள தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்து திஸ்ஸ இது தொடர்பில் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சட்டத்தரணிகளை பொலிஸ் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்வது தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளவதாக இருந்தால், அது முறையாகவும் அனைத்து தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னரே மேற்கொள்ள வேண்டும். இருந்தபோதும் சட்டத்தரணிகள் 150 பேரை பொலிஸ் திணைக்களத்துக்கு இணைத்துக்கொள்ள அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் எந்த தகவலும் எமது சங்கத்துக்கு அனுப்பப்படவில்லை. இந்த தீர்மானத்தால், தேவையற்ற முறையில் வழக்குகள் குவிவது மற்றும் வழக்கு விசாரணைகளில் காலதாமதம் போன்றன ஏற்படலாம். அதனால் அரசாங்கத்தின் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ-இ)

மன்னாரில்

# தொடர் மழையால்

## 189 குடும்பங்கள் பாதிப்பு!

மன்னார், ஜன.15
மன்னாரில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல கிராமங்கள், வயல் நிலங்கள் மற்றும் தாழ்வான பகுதிகள் வெள்ளக் காடுகளாக மாறியுள்ளன.
தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள குடியிருப்புக்கள் வெள்ளக் காடுகளாக உருவெடுத்திருக்கின்றபோதும், பல குடும்பங்கள் தங்கள் வீடுகளில் மண் மூடைகளை அடுக்கிப் பாதுகாப்பைப் பலப்படுத்திக்கொண்டு தங்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.
இதுவரை கிடைக்கப்பெற்ற தகவலின்படி 189 குடும்பங்களைச் சேர்ந்த 654 நபர்கள் இவ் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
"மன்னார் எமில் நகரில் ஜீவபுரத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 97 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் . மேலும் இரு இடங்களில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 57 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்" என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
மடு பிரதேச செயலகப் பிரிவில் அமைதிபுரத்தில் 35 வீடுகளில் கூரைகளால் மழைநீர் வடிந்ததைத் தொடர்ந்து வேல்ட் விஷன் உதவியுடன் கூரைகளுக்கான தறப்பால் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
பாலம்பிட்டியிலும் 52 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் இடம்பெயராது தங்கள் வீடுகளிலே தங்கியிருக்கின்றனர் என மடு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
மன்னார் மாவட்டத்தில் சுமார் 30 ஆயிரம் ஏக்கரில் காலபோக விவசாயம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதும் இவைகளில் அதிகமான நெல் வயல்கள் நீரால் மூடப்பட்டுள்ளன என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(ற-60)

## ஏ-9 வீதியில் கட்டாக்காலிகள்; விபத்துக்களுக்கு அதுவே காரணம்

புதுக்குடியிருப்பு சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஜன.15
இரவு வேளைகளில் கட்டாக்காலிக் கால்நடைகள் ஏ-9 வீதிக்கு வருவதாலேயே விபத்துகள் அதிகரித்துள்ளன என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
திருமுறிகண்டி தொடக்கம் மாங்குளம் வரை ஏ-9 வீதியில் கால்நடைகளால் ஏற்படும் விபத்துகள் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வுகளில் எட்டு தடவைகளுக்கு மேல் பிரேரணைகளைக் கொண்டு வந்துள்ளோம். ஆனால் பிரதேச சபை கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தவறிவிட்டது. இதனால் விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றன. என்றார்.
இதேவேளை திருமுறிகண்டியில் இருந்து மாங்குளம் வரையான வீதி, மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் செல்லும் வீதி, மாங்குளத்தில் இருந்து துணுக்காய் மாந்தை கிழக்குக்கு செல்லும் வீதி போன்றவற்றில் பகல், இரவு வேளைகளில் கால்நடைகள் வீதிக்கு வருவதன் காரணமாக விபத்துகள் இடம் பெறுகின்றன என்று மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாங்குளம் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
(ஜ-ரி2)

## களையிழந்தது பொங்கல்

வவுனியா.ஜன.15
வவுனியாவில் கொரோனா வைரஸ் காரணமாக இம்முறை பொங்கல் பண்டிகை களை இழந்துள்ளது.
வவுனியா நகரில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் நகரப்பகுதிகள் உட்பட்ட 19 கிராம அலுவலர்கள், பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நகரில் அமைந்துள்ள முக்கிய ஆலயங்களில் இம்முறை பொங்கல் நிகழ்வோ பூசை வழிபாடுகளோ பெரியளவில் இடம்பெற்றிருக்கவில்லை. வவுனியா ஆதிவிநாயகர் ஆலயத்தில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து சிறியளவில் பொங்கல் நிகழ்வும் பூசை வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன. இதேவேளை நகரின் முடக்கம் காரணமாக மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் பொங்கல் பண்டிகை இம்முறை பெரியளவில் களை கட்டவில்லை. (ப-110)



வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாணிக்கவாசக சுவாமிகளின் தமிழின் மார்கழி மாத திருவாசகப் பதிகங்கள் முற்றோதல் நிகழ்வு வெகுசிறப்பாக சுகாதார விதிகளுக்கு இணங்க நடைபெற்றது. (ற-21)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.